**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு முதல் முறையாக 15-11-1996 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவிக் காலத்தில் மறைந்தால் அவருடைய வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இப்போது 15-11-1996-க்கு முன்பு ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பதவிக் காலத்தில் மறைவுற்றிருந்தாலும் அவருடைய வாரிசுதாரர்களுக்கும் அதேபோன்று சட்டமன்ற மேலவையில் இருந்து [illegible]-1986 வரை மேலவையில் உறுப்பினர்களாக பதவி வகிக்கும் காலத்தில் மறைந்த மேலவை உறுப்பினர்கள் அல்லது வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் 1-10-2007 முதல் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு 1-10-2007 முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் [illegible]/- வீதம் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் [illegible] இலட்சம் ஆகும். இதன்மூலம் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் பதவி வகித்த காலத்தில் மறைவுற்ற அனைத்து உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் கிடைக்க இவ்வரசு வழிவகை செய்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுக"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

30. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1992) 16 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

32. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)